Written by Administrator
Saturday, 13 June 2009 13:53 - Last Updated Saturday, 13 June 2009 14:43

□□□□□□ 12.06.2009

அண்ணா சாலையில் போஸ்டர்களை அகற்ற 500 பணியாளர்கள்!

சென்னை, ஜூன் 11: சென்னை அண்ணா சாலையில் போஸ்டர்கள், கவர் விளம்பரங்களுக்கு நிரந்தரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அண்ணா சாலையில் நந்தனம், தேனாம்பேட்டை அண்ணா மேம்பாலம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மாநகராட்சிப் பணியாளர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து சென்று போஸ்டர்களை அகற்றினர். விளம்பரங்களும் அகற்றப்பட்டன.

இப் பணியில் மாநகராட்சியின் 500 பணியாளர்கள் ஒடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இச் சாலைகளில், போஸ்டர்கள் ஒட்டத் தடை விதிக்கப்பட்டுள்ளது குறித்து எச்சரிக்கும் வகையில் வைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக மாநகர மேயர் மா. சுப்பிரமணியம் இப் பணிகளை நேரில் ஆய்வு செய்தார்.

அரசு கட்டுமானங்களின் சுவர்களில் தமிழர்களின் கலை, பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையிலான பல்வேறு ஓவியங்களைத் தீட்டவும் திட்டமிடப்பட்டுள்ளன.



சென்னை அண்ணா சாலையில் சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்களுக்கு நிரந்தரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, சுவர்களில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் மாநகராட்சி ஊழியர்கள்.